©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 6.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 12] சென்னை, புதன்கிழமை, மார்ச் 23, 2022
பங்குனி 9, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2053

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண். 111, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (UD4(2)) துறை, நாள் 04.10.2021.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 08.09.1983 ஆம் நாளிட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1390 ஆம் (நிலை) எண் அரசாணையில், 14.12.1983 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** வெளியீட்டில் பாகம்II பிரிவு 2 இல் 1027–1032 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II/(2)HOU/7391/83 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்து விட்டு, அதற்கு பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், நெடும்பத்தி (3)–இல் சுட்டிக்காட்டப்பட்ட வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதிகளை உட்பிரிவுகளாகப் பிரித்து, அது தொடர்பான நெடும்பத்தி (4)–இல் தெரிவிக்கப்பட்டவாறாக அவற்றை ஒருங்கிணைத்து, அது தொடர்பான நெடும்பத்தி (5)-இன் நிகரான பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள பெயருடன், அது தொடர்பான நெடும்பத்தி (6)–இன் நிகரான பதிவில் சுட்டிக்காட்டப்பட்டவாறாக அவற்றை வட்டார திட்டமிடல் பகுதியாக இதனால் அமைக்கிறார்.

### விவர அட்டவணை

| *தொ.எண்* | *வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி* | *உட்பிரிவு/ ஒருங்கிணைத்தல்* | *வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி* |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | செங்கல்பட்டு மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | செங்கல்பட்டு வருவாய் மாவட்டத்தில் அதாவது காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், கும்மிடிப்பூண்டி, செங்கல்பட்டு, மதுராந்தகம், திருவள்ளூர், திருத்தணி, ஊத்துக்கோட்டை மற்றும் விவர அட்டவணையில் பட்டியலிடப்பட்ட பகுதிகள் நீங்கலாக பள்ளிப்பட்டு வட்டங்கள் ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி, உத்திரமேரூர், சைதாப்பேட்டை பொன்னேரி. | தனி வட்டார திட்டமிடல் பகுதியாக அமைக்கப்பட்டது. | 1. செங்கல்பட்டு காஞ்சிபுரம், திருவள்ளூர் வட்டார திட்டமிடல் பகுதி. | (a) செங்கல்பட்டு, மாவட்டத்தின் செங்கல்பட்டு, செய்யூர், மதுராந்தகம், திருக்கழுக்குன்றம், வண்டலூர் (பகுதி), திருப்போரூர் வட்டங்கள்<br><br>(b) காஞ்சிபுரம் மாவட்டத்தின் காஞ்சிபுரம், குன்றத்தூர் (பகுதி) ஸ்ரீபெரும்புதூர், உத்திரமேரூர், வாலாஜாபாத் வட்டங்கள்<br><br>(c) திருவள்ளூர் மாவட்டத்தின் கும்மிடிப்பூண்டி, பள்ளிப்பட்டு, பொன்னேரி (பகுதி), பூந்தமல்லி (பகுதி) ஆர்.கே. பேட்டை, திருத்தணி, திருவள்ளூர் (பகுதி), ஊத்துக்கோட்டை வட்டங்கள். |

| தொ.எண் | வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர் | வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி | உட்பிரிவு/ ஒருங்கிணைத்தல் | வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர் | வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | 2. சென்னை பெருநகர வட்டார திட்டமிடல் பகுதி | (a) சென்னை மாவட்டத்தின் ஆலந்தூர், அம்பத்தூர், அமைந்தகரை, அயனாவரம், எழும்பூர், கிண்டி, மாதவரம், மதுரவாயல், மாம்பலம், மைலாப்பூர், பெரம்பூர், புரசைவாக்கம், சோழிங்கநல்லூர், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை, வேளச்சேரி வட்டங்கள்.<br><br>(b) செங்கல்பட்டு மாவட்டத்தின் பல்லாவரம், தாம்பரம், வண்டலூர் (பகுதி) வட்டங்கள்.<br><br>(c) காஞ்சிபுரம் மாவட்டத்தின் குன்றத்தூர் (பகுதி) வட்டம்.<br><br>(d) திருவள்ளூர் மாவட்டத்தின் திருவள்ளூர் (பகுதி), பொன்னேரி (பகுதி), பூந்தமல்லி (பகுதி), ஆவடி வட்டங்கள். |
| 2. | வட ஆற்காடு மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | வட ஆற்காடு வருவாய் மாவட்டத்தில் அதாவது வேலூர், ஆற்காடு, வாலாஜா, அரக்கோணம், செய்யாறு, வந்தவாசி, ஆரணி, திருவண்ணாமலை, போளூர், செங்கம், திருப்பத்தூர், வாணியம்பாடி மற்றும் குடியாத்தம் ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | தனி வட்டார திட்டமிடல் பகுதியாக அமைக்கப்பட்டது. | 3. வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை வட்டார திட்டமிடல் பகுதி | (a) அணைக்கட்டு, குடியாத்தம், காட்பாடி, கே.வி. குப்பம், பேர்ணாம்பட் வேலூர் மாவட்டங்கள்<br><br>(b) இராணிப்பேட்டை மாவட்டத்தின் ஆற்காடு, வாலாஜா, அரக்கோணம், நெமிலி, கலவை, சோழிங்கநல்லூர் வட்டங்கள்<br><br>(c) திருப்பத்தூர் மாவட்டத்தின் ஆம்பூர், நாட்ராம்பள்ளி, திருப்பத்தூர், வாணியம்பாடி வட்டங்கள்<br><br>(d) ஆரணி, செங்கம், சேத்துப்பட்டு, போளூர், சமுனாமரத்தூர், கலசப்பாக்கம், கீழ்பென்னாத்தூர், செய்யாறு, தண்டாரம்பட்டு, திருவண்ணாமலை, வந்தவாசி, வெம்பாக்கம் வட்டங்கள் |
| 3. | தருமபுரி மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | தருமபுரி வருவாய் மாவட்டத்தில் அதாவது தருமபுரி, அரூர், ஊத்தங்கரை, பாலக்கோடு, பென்னாகரம், ஒசூர், கிருஷ்ணகிரி மற்றும் தேன்கனிக்கோட்டை ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | சேலம் வட்டார திட்டமிடல் பகுதியுடன் சேர்க்கப்பட்டவை | | |
| 4. | சேலம் மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | சேலம் வருவாய் மாவட்டத்தில் அதாவது சேலம், ஆத்தூர், ஏற்காடு, மேட்டூர், ஓமலூர், சங்ககிரி, திருச்செங்கோடு, இராசிபுரம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள் ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | தருமபுரி மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதியுடன் சேலம் வட்டார திட்டமிடல் பகுதியை சேர்ப்பதன் வாயிலாக தனி திட்டமிடல் பகுதியாக அமைக்கப்பட்டது. | சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி வட்டார திட்டமிடல் பகுதி | (a) சேலம் மாவட்டத்தின் ஆத்தூர், எடப்பாடி கங்கவள்ளி, மேட்டூர், கடையம்பட்டி, ஓமலூர், பெத்தநாயக்கன்பாளையம், சேலம், சேலம் தெற்கு, சேலம் மேற்கு, சங்ககிரி, வாழப்பாடி, ஏற்காடு, தலைவாசல் வட்டங்கள். |

| தொ.எண் | வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர் | வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி | உட்பிரிவு/ ஒருங்கிணைத்தல் | வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர் | வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | நாமக்கல் மாவட்டங்கன் ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | | | (b) நாமக்கல் மாவட்டத்தின் கொல்லிமலை, மோகனூர் குமாரபாளையம், நாமக்கல், பரமத்தி வேலூர், இராசிபுரம், சேந்தமங்கலம், திருச்செங்கோடு வட்டங்கள்<br><br>(c) கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஆஞ்செட்டி, பர்கூர், தேன்கனிக்கோட்டை, ஓசூர், கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, சூளகிரி, ஊத்தங்கரை வட்டங்கள்<br><br>(d) தருமபுரி மாவட்டத்தின் தருமபுரி, அரூர், கரியமங்கலம், நல்லம்பள்ளி, பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, பென்னாகரம் வட்டங்கள் |
| 5. | தென் ஆற்காடு மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | தெற்கு ஆற்காடு வருவாய் மாவட்டத்தில் அதாவது சிதம்பரம், கடலூர், பண்ருட்டி, காட்டுமன்னார் கோயில், விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி, திட்டக்குடி, திருக்கோயிலூர், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், திண்டிவனம், வானூர், செஞ்சி மாவட்டங்கள் ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | தனி வட்டார திட்டமிடல் பகுதியாக அமைக்கப்பட்டது. | 5. விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி வட்டார திட்டமிடல் பகுதி | (a) விழுப்புரம் மாவட்டத்தின் செஞ்சி, வானூர், கண்டச்சிபுரம், மரக்காணம், மேல்மலையனூர், திருவெண்ணெய்நல்லூர், திண்டிவனம், விக்கிரவாண்டி, விழுப்புரம் வட்டங்கள்<br><br>(b) கடலூர் மாவட்டத்தின் புவனகிரி, சிதம்பரம், கடலூர், காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, ஸ்ரீமுஷ்ணம், திட்டக்குடி, வேப்பூர், விருத்தாச்சலம் வட்டங்கள்<br><br>(c) கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் சின்ன சேலம், கள்ளக்குறிச்சி, கல்வராயன் மலை, சங்கராபுரம், திருக்கோயிலூர், உளுந்தூர்பேட்டை வட்டங்கள். |
| 6. | கோயம்புத்தூர் மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | கோயம்புத்தூர் வருவாய் மாவட்டத்தில் அதாவது அவினாசி, கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், பல்லடம், பொள்ளாச்சி, வால்பாறை மற்றும் உடுமலை ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | பெரியார் மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதியுடன் கோயம்புத்தூர் வட்டார திட்டமிடல் பகுதியை சேர்ப்பதன் வாயிலாக தனி திட்டமிடல் பகுதியாக அமைக்கப்பட்டது. | 6. கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் வட்டார திட்டமிடல் பகுதி | (a) கோயம்புத்தூர் மாவட்டத்தின் கோயம்புத்தூர் தெற்கு, பேரூர், மதுக்கரை, சூலூர், கோயம்புத்தூர் வடக்கு, அன்னூர், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, வால்பாறை, ஆனைமலை வட்டங்கள்<br><br>(b) ஈரோடு மாவட்டத்தின் ஈரோடு, பெருந்துறை, மொடக்குறிச்சி, கொடுமுடி, பவானி, அந்தியூர், கோபிசெட்டிப்பாளையம், சத்தியமங்கலம், தாளவாடி, நம்பியூர் வட்டங்கள்.<br><br>(c) திருப்பூர் மாவட்டத்தின் திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, அவினாசி, ஊத்துக்குளி, பல்லடம், காங்கேயம், தாராபுரம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் வட்டங்கள். |

| *தொ.எண்* | *வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி* | *உட்பிரிவு/ ஒருங்கிணைத்தல்* | *வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி* |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 7. | பெரியார் மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | பெரியார் வருவாய் மாவட்டத்தில் அதாவது காங்கேயம், தாராபுரம், ஈரோடு, பெருந்துறை, பவானி, கோபிசெட்டிப்பாளையம், சத்தியமங்கலம் வட்டங்கள் ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | கோயம்புத்தூர் வட்டார திட்டமிடல் பகுதியுடன் ஒன்று சேர்த்தல் | | |
| 8. | நீலகிரி மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | நீலகிரி வருவாய் மாவட்டத்தில் அதாவது கூடலூர், உதகமண்டலம், குன்னூர் மற்றும் கோத்தகிரி ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | தனி வட்டார திட்டமிடல் பகுதியாக அமைக்கப்பட்டது. | நீலகிரி வட்டார திட்டமிடல் பகுதி | நீலகிரி மாவட்டத்தின் உதகமண்டலம், குந்தா, குன்னூர், கோத்தகிரி, கூடலூர், பந்தலூர் வட்டங்கள் |
| 9. | திருச்சிராப்பள்ளி மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்தில் அதாவது திருச்சிராப்பள்ளி, முசிறி, லால்குடி, துறையூர், அரியலூர், பெரம்பலூர், உடையார்பாளையம், குளித்தலை, மணப்பாறை மற்றும் கரூர் வட்டங்கள் ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | புதுக்கோட்டை மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதியுடன் திருச்சிராப்பள்ளி வட்டார திட்டமிடல் பகுதியைச் சேர்ப்பதன் வாயிலாக தனி வட்டார திட்டமிடல் பகுதியாக அமைக்கப்பட்டது. | 8. திருச்சிராப்பள்ளி, அரியலூர், கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை வட்டார திட்டமிடல் பகுதி | (a) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் லால்குடி, மணச்சநல்லூர், மணப்பாறை, முசிறி, ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி மேற்கு, திருவெறும்பூர், தொட்டியம், துறையூர், திருச்சிராப்பள்ளி கிழக்கு, மருங்காபுரி வட்டங்கள்<br><br>(b)அரியலூர் மாவட்டத்தின் ஆண்டிமடம், அரியலூர், உடையார்பாளையம், செந்துறை வட்டங்கள்.<br><br>(c) கரூர் மாவட்டத்தின் அரவக்குறிச்சி, கடவூர், கரூர், குளித்தலை, கிருஷ்ணராயபுரம், மண்மங்கலம், புகளூர் வட்டங்கள்.<br><br>(d) பெரம்பலூர் மாவட்டத்தின் ஆலத்தூர், குன்னம், பெரம்பலூர், வேப்பந்தட்டை வட்டங்கள்.<br><br>(e) புதுக்கோட்டை மாவட்டத்தின் ஆலங்குடி, அறந்தாங்கி, கந்தர்வக் கோட்டை, புதுக்கோட்டை, குளத்தூர், திருமயம், கறம்பக்குடி, ஆவுடையார் கோயில், மணமேல்குடி, இலுப்பூர், பொன்னமராவதி, விராலிமலை வட்டங்கள் |
| 10. | தஞ்சாவூர் மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | தஞ்சாவூர் வருவாய் மாவட்டத்தில் அதாவது தஞ்சாவூர், ஒரத்தநாடு, திருவையாறு, கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம், வலங்கைமான், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், நாகப்பட்டினம், திருவாரூர், நன்னிலம், குடவாசல், நீடாமங்கலம், பொறையூர், மயிலாடுதுறை, சீர்காழி, பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | தனி வட்டார திட்டமிடல் பகுதியாக அமைக்கப்பட்டது. | 9. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை வட்டார திட்டமிடல் பகுதி | (a) தஞ்சாவூர் மாவட்டத்தின் பூதலூர், கும்பகோணம், ஒரத்தநாடு, பாபநாசம், பட்டுக்கோட்டை, பேராவூரணி, தஞ்சாவூர், திருவையாறு, திருவிடைமருதூர் வட்டங்கள்.<br><br>(b) திருவாரூர் மாவட்டத்தின் கூத்தநல்லூர், குடவாசல், மன்னார்குடி, நன்னிலம், நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி, திருவாரூர், வலங்கைமான் வட்டங்கள். |

| *தொ.எண்* | *வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி* | *உட்பிரிவு/ ஒருங்கிணைத்தல்* | *வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி* |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | | (c) நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தின் கீழ்வேளூர், குத்தாலம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், சீர்காழி, தரங்கம்பாடி, திருக்குவளை, வேதாரண்யம் வட்டங்கள். |
| 11. | மதுரை மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | மதுரை வருவாய் மாவட்டத்தில் அதாவது மதுரை–தெற்கு, மதுரை–வடக்கு, மேலூர், நத்தம், திருமங்கலம், உசிலம்பட்டி, நிலக்கோட்டை, திண்டுக்கல், வேடசந்தூர், பழனி, பெரியகுளம், உத்தமபாளையம், மற்றும் கொடைக்கானல் ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | தனி வட்டார திட்டமிடல் பகுதியாக அமைக்கப்பட்டது. | 10. மதுரை, தேனி, திண்டுக்கல் வட்டார திட்டமிடல் பகுதி | (a) மதுரை மாவட்டத்தின் மதுரை வடக்கு, மதுரை மேற்கு, வாடிப்பட்டி, மேலூர், மதுரை கிழக்கு, மதுரை தெற்கு, உசிலம்பட்டி, பேரையூர், திருமங்கலம், திருப்பரங்குன்றம், கள்ளிக்குடி வட்டங்கள்<br><br>(b) தேனி மாவட்டத்தின் தேனி, ஆண்டிப்பட்டி, பெரிய குளம், போடிநாயக்கனூர், உத்தமபாளையம் வட்டங்கள்<br><br>(c) திண்டுக்கல் மாவட்டத்தின் திண்டுக்கல் கிழக்கு, நிலக்கோட்டை, நத்தம், ஆத்தூர், பழனி, ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், கொடைக்கானல், திண்டுக்கல் மேற்கு, குஜிலியம்பாறை வட்டங்கள். |
| 12. | இராமநாதபுரம் மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | இராமநாதபுரம் வருவாய் மாவட்டத்தின் அதாவது, இராமநாதபுரம், முதுகுளத்தூர், கமுதி, திருவாடானை, திருப்பத்தூர், காரைக்குடி, தேவக்கோட்டை, சிவகங்கை, பரமக்குடி, மானாமதுரை, இளையாங்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம், சாத்தூர், அருப்புக்கோட்டை, இராமேஸ்வரம், விருதுநகர் மற்றும் திருச்சுழி ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | தனி வட்டார திட்டமிடல் பகுதியாக அமைக்கப்பட்டது. | 11. சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் வட்டார திட்டமிடல் பகுதி | (a) சிவகங்கை மாவட்டத்தின் சிவகங்கை, மானாமதுரை, இளையாங்குடி, திருப்புவனம், காளையார்கோயில், காரைக்குடி, தேவக்கோட்டை, திருப்பத்தூர், சிங்கம்புணரி வட்டங்கள்.<br><br>(b) இராமநாதபுரம் மாவட்டத்தின் இராமநாதபுரம், இராமேஸ்வரம், திருவாடானை, கீழக்கரை, இராஜசிங்கமங்கலம், கடலாடி, கமுதி, முதுகுளத்தூர், பரமக்குடி வட்டங்கள்.<br><br>(c) விருதுநகர் மாவட்டத்தின் இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை, திருச்சுழி, காரியாபட்டி, வெம்பக்கோட்டை, வத்திராயிருப்பு மாவட்டங்கள் |
| 13. | புதுக்கோட்டை மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | புதுக்கோட்டை வருவாய் மாவட்டத்தில் அதாவது குளத்தூர், ஆலங்குடி, புதுக்கோட்டை, திருமயம், கந்தர்வக்கோட்டை, அறந்தாங்கி மற்றும் ஆவுடையார்கோயில் ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | திருச்சிராப்பள்ளி வட்டார திட்டமிடல் பகுதியுடன் ஒன்று சேர்க்கப்பட்டது. | | |

| தொ.எண் | வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர் | வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி | உட்பிரிவு/ ஒருங்கிணைத்தல் | வட்டார திட்டமிடல் பகுதியின் பெயர் | வட்டார திட்டமிடல் பகுதியில் அடங்கியுள்ள பகுதி |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 14. | திருநெல்வேலி வட்டார திட்டமிடல் பகுதி | திருநெல்வேலி வருவாய் மாவட்டத்தில் அதாவது திருநெல்வேலி, தென்காசி, செங்கோட்டை, கோவில்பட்டி, ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம், சங்கரன்கோவில், அம்பாசமுத்திரம், நாங்குநேரி, இராதாபுரம், தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், சிவகிரி, பாளையம்கோட்டை மற்றும் சாத்தான்குளம் ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | கன்னியாகுமரி மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதியுடன் திருநெல்வேலி வட்டார திட்டமிடல் பகுதியை ஒன்று சேர்ப்பதன் வாயிலாக தனி வட்டார திட்டமிடல் பகுதியாக அமைக்கப்பட்டது. | திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, வட்டார திட்டமிடல் பகுதி | (a) ) திருநெல்வேலி மாவட்டத்தின் திருநெல்வேலி, பாளையம்கோட்டை, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, இராதாபுரம், மானூர், சேரன்மகாதேவி, திசையன்விளை வட்டங்கள்.<br><br>(b) தூத்துக்குடி மாவட்டத்தின் தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், கோவில்பட்டி, சாத்தான்குளம், ஏரல், எட்டையபுரம், விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம், கயத்தாறு வட்டங்கள்.<br><br>(c) தென்காசி மாவட்டத்தின் தென்காசி, கடையநல்லூர், திருவேங்கடம், சங்கரன்கோவில், செங்கோட்டை, ஆலங்குளம், வீரகேரளம்புதூர், சிவகிரி வட்டங்கள்.<br><br>(d) கன்னியாகுமரி மாவட்டத்தின் அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு, திருவட்டாறு, கிளியூர் வட்டங்கள். |
| 15. | கன்னியாகுமரி மாவட்ட வட்டார திட்டமிடல் பகுதி | கன்னியாகுமரி வருவாய் மாவட்டத்தில் அதாவது தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு வட்டங்கள் ஆகிய அனைத்து வட்டங்களை உள்ளடக்கிய பகுதி | திருநெல்வேலி வட்டார திட்டமிடல் பகுதியுடன் ஒன்று சேர்த்தல் | | |

**ஹிதேஸ் குமார் எஸ். மக்வானா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் (மொ.பெ) துறை.*

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (ப) எண். 305, தொழிலாளர் நலன் மற்றும் மேம்பாட்டு (J1)த் துறை, 26 ஜூலை 2021.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதிய பின்வரும் வரைவு அறிவிக்கை மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும், என்றும் இது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், யாதொரு நபரிடமிருந்து பெறப்படும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை—600 006-இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 03.01.2018 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** பாகம் II பிரிவு 2 இல் 13–15 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II (2) தொ.வே.வா/15/2018 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செங்கற்கள் மற்றும் ஓடுகள் தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அதன் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**செங்கற்கள் மற்றும் ஓடுகள் தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் ரூ. காசு.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | **தொகுதி-I (பயிற்சி பெற்ற தொழிலாளர்கள்)** | |
| 1. | கருமார்கள் | 6411.00 மாதம் ஒன்றுக்கு |
| 2. | மரவேலை செய்பவர்கள் (குச்சர்கள்) | |
| 3. | பொருத்துநர்கள் | 6501.00 மாதம் ஒன்றுக்கு |
| 4. | மின் கம்மியர்கள் | |
| 5. | எந்திரக்கம்மியர் | |
| 6. | கொத்தனார்கள் | |
| 7. | இயக்குபவர்கள் | 6411.00 மாதம் ஒன்றுக்கு |
| 8. | எஞ்சின் ஓட்டுநர்கள் | |
| 9. | பற்ற வைப்பவர்கள் | |
| 10. | அச்சு தயாரிப்பவர்கள் | 6501.00 மாதம் ஒன்றுக்கு |
| | **தொகுதி-II** | |
| | **நிலை-I தொழிலாளர்கள்:** | |
| 1. | வார்ப்பட உதவியாளர்கள் (Mould Helpers) | |
| 2. | மண்ணை அழுத்தி வழவழப்பாக்குபவர் | |
| 3. | செங்கற்களைத் தயாரிப்பவர்கள் (அல்லது) ஓடுகள் தயாரிப்பவர்கள் | |
| 4. | அச்சிலிருந்து எடுப்பவர்கள் (Die Pullers) | |
| 5. | களி மண்ணை துண்டமாக வெட்டுபவர்கள் மற்றும் மண்ணை மிதிப்பவர்கள் | |
| 6. | களிமண்ணை கலப்பவர்கள் | |
| 7. | செங்கற் சூளையில் சுமை ஏற்றுபவர்கள் மற்றும் இறக்குபவர்கள் | |
| 8. | சூளையிற் சுட்ட செங்கற்களை வகைப்படுத்துபவர்கள் மற்றும் சிப்பம் செய்பவர்கள் (அடுக்குவது உட்பட) | 225.00 நாள் ஒன்றுக்கு |
| 9. | உருளையை சுழற்றுபவர்கள் | |

| *தொடர் எண்* | *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் ரூ. காசு.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 10. | ஓடுகளை ஒழுங்காக வெட்டுபவர்கள் (*Tile Trimmers)* | |
| 11. | செயற்கை முறையில் செங்கற்களை உலர வைக்கும் பணியில் ஈடுபடும் உதவியாளர்கள் | |
| 12. | சூளை எரிப்பவர்கள் | |
| 13. | பாதுகாவலர் அல்லது காவலாள் | |
| | **தொகுதி-III** | |
| | **நிலை-II தொழிலாளர்கள்** | |
| 1. | பொருட்களைக் கையாளும் தொழிலாளர்கள் | |
| 2. | பொருட்களைக்கொண்டுச் செல்பவர்கள் | |
| 3. | உதவியாட்கள் | |
| 4. | ஓடுகளைக் கொண்டுச் செல்பவர்கள் | |
| 5. | எரிபொருட்களைக் கொண்டுச் செல்பவர்கள் | |
| 6. | களிமண்ணைக் கொண்டுச் செல்பவர்கள் மற்றும் எடுத்துச் செல்பவர்கள் | |
| 7. | ஏற்றி இறக்கும் பணியை மேற்கொள்ளும் உதவியாளர்கள் | |
| 8. | பாளங்களை வெட்டுபவர்கள் மற்றும் பாளங்களை எடுத்துச்செல்பவர்கள் | |
| 9. | களிமண் வழங்குவோர் (Clay Feeders) | |
| 10. | பொதுவான கூலிவேலை செய்யும் தொழிலாளர்கள் | |
| 11. | சிலாப் பிளேசர்ஸ் (Slab Placers) | **215.00** நாள் ஒன்றுக்கு |
| 12. | துப்புரவாளர்கள் | |
| 13. | சட்டத்திலிருந்து சுடப்படாத ஓடுகளை எடுப்பவர்கள் | |
| 14. | சுடப்படாத செங்கற்கள் மற்றும் ஓடுகளை எடுத்துச் செல்பவர்கள் | |
| 15. | செங்கல் தயாரிப்புக் கருவியை வழங்குபவர்கள் (Pallet Suppliers) | |
| 16. | செங்கல் தயாரிப்புக் கருவியை சேகரிப்பவர்கள் (Pallet Collection) | |
| 17. | நீர்கொண்டு செல்பவர்கள் | |
| 18. | மணல் மற்றும் சிமிட்டியை கலப்பவர்கள் (மொசைக்) | |
| 19. | மொசைக் கற்களை தலைச்சுமையாக எடுத்துச் செல்லும் தொழிலாளர்கள் | |
| 20. | மணல் வழங்குபவர்கள் (மொசைக்) | |
| 21. | ஓடுகளை ஒட்டுபவர்கள் (மொசைக்) | |
| 22. | பெட்டி அகற்றுபவர்கள் (மொசைக்) (Box Removers) | |
| 23. | வண்ணங்கள் கலப்பவர்கள் (மொசைக்) | |
| 24. | சிப்ஸ்களை நேர்த்தியாக்குபவர்கள் (மொசைக்) (Chips Sorenmers) | |

| *தொடர் எண்* | *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் ரூ. காசு.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 25. | I, II மற்றும் IV ஆம் தொகுதியின்கீழ் குறிப்பிடப்படாத ஏனைய தொழிலாளர்கள் | |
| | **தொகுதி**-IV : | |
| | **பணியாளர்:** | |
| 1. | முதலாள் | **7426.00** திங்கள் ஒன்றுக்கு |
| 2. | தொழில்நுட்ப மேற்பார்வையாளர் | **7064.00** திங்கள் ஒன்றுக்கு |
| 3. | மேற்பார்வையாளர் | **6689.00** திங்கள் ஒன்றுக்கு |
| 4. | எழுத்தர் | **6596.00** திங்கள் ஒன்றுக்கு |
| 5. | கணக்காளர் | **7064.00** திங்கள் ஒன்றுக்கு |
| 6. | பண்டகக்காப்பாளர் | **6689.00** திங்கள் ஒன்றுக்கு |
| 7. | அலுவலகப் பையன் | **6047.00** திங்கள் ஒன்றுக்கு |
| 8. | (i) மேஸ்திரி | **6596.00** திங்கள் ஒன்றுக்கு |
| | (ii) மேஸ்திரி | **6759.00** திங்கள் ஒன்றுக்கு |
| | **(12ஆண்டுகளுக்கு மேலாக மேஸ்திரியாக பணியாற்றுபவர்கள்)** | |
| | **செங்கல் தயாரிப்புக்கான கூலி:** | |
| 1. | 1000 எண்ணிக்கையிலான சூளை செங்கற்களுக்கு | 610.39 |
| 2. | 1000 எண்ணிக்கையிலான நாட்டு செங்கற்களுக்கு | 457.98 |
| 3. | 1000 எண்ணிக்கையிலான செங்கற்களை சூளைக்குக் கொண்டுச்செல்வதற்கு | 306.71 |
| 4. | 1000 எண்ணிக்கையிலான மேசை வார்ப்பு செங்கற்களுக்கு (Table Mould Bricks) | 763.74 |
| 5. | 1000 எண்ணிக்கையிலான செங்கற்களை சூளையிலிருந்து ஏற்றி இறக்குவதற்கு | 76.76 |
| | சூளைக்கு மணலைக் கொண்டுவந்து சேம்பரில் பரப்புவதற்கு | 182.01 |
| | விறகு அல்லது நிலக்கரியை கொண்டுவர டன் ஒன்றுக்கு | 155.73 |
| | (அ) சூளையை எரிப்பவர் | 243.00 நாள் ஒன்றுக்கு |
| | (ஆ) மேசை வார்ப்பு செங்கற்களை வெட்டி எடுத்து ஒழுங்காக அடுக்குவதற்கு | 766.39 (1000 எண்ணிக்கையுடைய செங்கற்களுக்கு) |
| | (இ) சேம்பர் செங்கற்களுக்கு | 610.39 (1000 எண்ணிக்கையுடைய செங்கற்களுக்கு) |
| | (ஈ) செங்கல் அளவு (வரையறுக்கப்பட்ட செங்கல் அளவு 9"X4½"X3")<br>**22.5 செ.மீ. X 11.25 செ.மீ. X 7.5 செ.மீ.**<br>**100** அடி தொலைவிற்குள் சுமை ஏற்ற வேண்டும். **100** அடி தொலைவிற்கு மேலாகச்சென்று சுமை ஏற்றப்படுமானால் அதற்கு பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொகை வழங்கப்படும். | 457.96 (1000 எண்ணிக்கையுடைய செங்கற்களுக்கு) |

| *தொடர் எண் (1)* | *தொழிலாளர்களின் வகைகள் ஊதிய வீதங்கள் (2)* | | | *குறைந்தளவு அடிப்படை ரூ. காசு. (3)* |
|---|---|---|---|---|
| | **மொசைக் ஓடுகள் தயாரிப்பதற்கான ஊதியங்கள்:** | | | |
| **1.** | சிமிட்டியிலான தனிவகை ஓடுகள் | (i) | ஓடுகள் தயாரிப்பவருக்கு | **259.00** நாள் ஒன்றுக்கு |
| **2.** | மொசைக் ஓடுகள் | (ii) | கலப்பவர் (Mixer)<br>கலப்பதற்கானபடி | **225.00** நாள் ஒன்றுக்கு<br>**32.50** நாள் ஒன்றுக்கு |
| | | (iii) | உதவியாள் | **225.00** நாள் ஒன்றுக்கு |
| **3.** | சிமிட்டி ஓடுகளைப் பதிப்பவர்கள் | | | **225.00** நாள் ஒன்றுக்கு |
| **4.** | வார்ப்பட இயக்குபவர்கள் | | | **225.00** நாள் ஒன்றுக்கு |

**விளக்கங்கள்:**

**(1)** மழைக்காலங்களில் பணி தொடங்கப்பட்ட பின்னர், மழையின் காரணமாக தொழிலாளர்கள் பணியை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுமாயின், பணி முடிக்கப்படுவதற்கு வழக்கமாக எவ்வளவு ஊதியத்தை அவர்கள் ஈட்டியிருப்பார்களோ, அத்தொகையில் **50** சதவீத தொகையைப்பெற அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

**(2) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன், தொழிலாளர்களுக்கு பின்வரும் அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படி, **2010** ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது, அதாவது **2001 = 100** என்பதன் அடிப்படையில் **161** புள்ளிகள் ஆகும். **161** புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு ரூபாய் **1.05** (ஒரு ரூபாய் மற்றும் ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழக்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படியானது, முந்தைய **12** (பன்னிரண்டு) மாதங்களுக்கான அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் சராசரி விலைப்புள்ளியின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து கணக்கிடப்படவேண்டும்.

(iii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர் நுகர்வோர் விலைப்புள்ளிக் குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**(3)** அன்றாட ஊதிய வீதம் மற்றும் அகவிலைப்படி என்பதில், விடுமுறை நாள் ஊதியமும் அடங்கும்.

**(4)** (i) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிடுவதற்கு, நாள் மாதாந்திர ஊதியத்தை **26** ஆல் வகுக்கவேண்டும்.

(ii) மாதாந்திர ஊதியங்களைக் கணக்கிடுவதற்கு, நாள் ஊதியத்தை **30** ஆல் பெருக்கவேண்டும்.

**(5)** ஒரே தன்மையுடைய பணியைச் செய்யும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**(6) 1948** ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் (மத்தியச் சட்டம் **63/1948**) மற்றும் ஏனைய தொழிலாளர் நலச்சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் வராத செங்கல் மற்றும் ஓடுகள் முதலியவற்றைத் தயாரிக்கும் தொழிலில் பணியிலமர்த்தப்பட்டுள்ளவர்களும் தமிழ்நாடு **1958** ஆம் ஆண்டு, தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **33/1958**) கீழ் விடுப்புக்காலப் பயன்கள், நோய்க்கான சலுகைகள் அல்லது விடுமுறைகள் ஆகியவற்றையும், வருங்கால வைப்புநிதி மற்றும் தொழிலாளர் நலக் காப்புறுதிச் சலுகை ஆகியவற்றையும் பயன்படுத்த இயலாதவர்களும், மேற்சொன்ன சலுகைகளுக்குப் பதிலாக, தொகுதி–I மற்றும் தொகுதி–III-இன் கீழ் வரும் தொழிலாளர்களாக இருப்பின் அவர்களுக்கு நாளொன்றுக்கு **36.65** ரூபாயும், தொகுதி–II மற்றும் தொகுதி–IV-இன் கீழ்வரும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் நாளொன்றுக்கு **31.42** ரூபாயும், கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

**(7)** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

*[அரசாணை (2ப) எண். 42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(M1) துறை நாள்: 27.09.2021]*

2009ஆம் ஆண்டு சட்டமுறை எடைஎயவு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/2010) 14ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 18.12.1991ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் VI, பிரிவு 1—இல், 1025ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட VI(1)/1677/91ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள அட்டவணையின் நெடும்பத்தி (2)—இல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள், மேற்சொன்ன சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அதிகாரங்களை செலுத்தவும் கடமையாற்றவும் உள்ளூர் எல்லைகளை அந்த அட்டவணையின்(3) ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக இதனால் குறிப்பிடுகிறார்.

**அட்டவணை**

| *தொடர் எண்*<br>*(1)* | *பதவிப்பெயர்*<br>*(2)* | *உள்ளூர் எல்லைகள்*<br>*(3)* |
|---|---|---|
| 1. | தொழிலாளர் துறை துணை ஆய்வாளர் (சேமிப்பு தொட்டிகள்), மெட்ராஸ் | (i) சென்னை, தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகள்<br><br>சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை, வருவாய் மாவட்டங்கள்.<br><br>(ii) திருச்சி, தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகள்<br><br>அரியலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருவாரூர், திண்டுக்கல், கரூர், நாகப்பட்டினம் மற்றும் தேனி வருவாய் மாவட்டங்கள். |
| 2. | தொழிலாளர் துறை துணை ஆய்வாளர் (சேமிப்பு தொட்டிகள்), மெட்ராஸ் | (i) கோயம்புத்தூர், தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகள்<br><br>கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல், ஈரோடு மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள்<br><br>(ii) மதுரை, தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகள்<br><br>மதுரை, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள். |

*[அரசாணை (நிலை) எண். 155, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I2)த் துறை, நாள் 21.10.2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னரும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டத்தில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

***திருத்தங்கள்***

மேற்சொன்ன திட்டத்தில் 15 ஆம் பகுதியைச் சேர்ந்த (1) துணைப் பகுதியில் உள்ள அட்டவணையில் தொடர் எண் 6 மற்றும் அது தொடர்புடைய பதிவுகளுக்குப் பதிலாக பின்வரும் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் அவையாவன:—

6 EE முறையான இளநிலை பட்டப்படிப்பு 4,000 4,000 4,000 4,000 பயிலுவோர் (ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும்:

*[அரசாணை (நிலை) எண். 156, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I2)த் துறை, நாள் 21.10.2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னரும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டத்தில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

***திருத்தங்கள்***

மேற்சொன்ன திட்டத்தில் 15 ஆம் பகுதியைச் சேர்ந்த (1) உட்பிரிவியின் உள்ள அட்டவணையில் தொடர் எண் 10 மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பின்னர் பின்வரும் தொடர் எண் 10 மற்றும் அது தொடர்பான பதிவுகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் அதாவது:—

"11 E(1) படித்துக் கொண்டிருக்கும் வகுப்பு 6 முதல் 9 வரை 1000 1000

(2) உட்பகுதி (3)க்குப் பதிலாக பின்வரும் உட்பகுதியானது அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் அதாவது:–

(3) உட்பகுதி 1இல் உள்ள அட்டவணையின் நெடும்பத்தி (1)–இல் உள்ள தொடர் எண்கள் 2 மற்றும் 5–இல் குறிப்பிடப்பட்டுள்ள உதவித்தொகை விண்ணப்பத்தை அப்படிப்பில் தேர்ச்சிப் பெற்றப் பின்னர் விவர அட்டவணை II–இல் உள்ள படிவம் E–இல் அளிக்க வேண்டும். மேற்சொன்ன அட்டவணையின் நெடும்பத்தி (1)–இல் உள்ள தொடர் எண்கள் 6 முதல் 10 வரை குறிப்பிடப்பட்டுள்ள உதவித் தொகை விண்ணப்பங்களை படிப்பினை முடிப்பதற்கு முன்னர் அல்லது தேர்ச்சிப் பெறுவதற்கு முன்னர் விவர அட்டவணை II–இல் உள்ள படிவம் EE–இல் அளிக்க வேண்டும். தொடர் எண்கள் 1,3,4 மற்றும் 11 இல் குறிப்பிடப்பட்டுள்ள உதவித் தொகை விண்ணப்பங்களை படிப்பினை முடிப்பதற்கு முன்னர் அல்லது தேர்ச்சிப் பெறுவதற்கு முன்னர் விவர விவர அட்டவணை II–இல் உள்ள படிவம் EEE மற்றும் E(1)–இல் அளிக்க வேண்டும்:–

3. EEE படிவத்திற்கு பின்னர் பின்வரும் படிவம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் அதாவது:–

**" படிவம்–E (1)**

[15(3) ஆம் பகுதியைக் காண்க]

**6 ஆம் வகுப்பு / 7ஆம் வகுப்பு / 8 ஆம் வகுப்பு / 9 ஆம் வகுப்பு படிக்கின்ற**

**குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பம்**

பெறுநர்

தொழிலாளர் நல உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)

.............................................மாவட்டம்.

1. பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் பெயர்

2. (a) பதிவு எண் மற்றும் முதற்கண் பதிவுசெய்த நாள்

(அசல் அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும்)

(b) எந்த கால அளவு வரையில் புதுப்பிக்கப்பட்டது என்பதை குறிப்பிடுகின்ற கடைசியாக புதுப்பிக்கப்பட்ட நாள்

3. அஞ்சல் குறியீட்டெண்ணுடன் முகவரி (முழுமையாக)

4. பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள்:

| *தொடர் எண்* | *பெயர்* | *பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளருடனான உறவுமுறை* | *வயது* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| | | | |

5. கல்வி உதவித்தொகை கோருபவரின் மகன்/மகள் பற்றிய விவரங்கள்:

| *தொடர் எண்* | *பெயர்* | *பிறந்த நாள்* | *படிக்கும் வகுப்பு (6ஆம்/7ஆம்/8ஆம்/9ஆம் வகுப்பு* | *படிக்கின்ற ஆண்டு (கல்வி ஆண்டைக் குறிப்பிடவும்)* | *பள்ளியின் பெயர் முழு முகவரியுடன்* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| | | | | | |

**குறிப்பு**:–பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் மகன்/மகள் படிக்கின்ற பாடப்பிரிவு குறித்த பள்ளியின் தலைமை ஆசிரியர் முதல்வரிடமிருந்து பெற்ற சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**6.** வாரியத்திடமிருந்து ஏற்கனவே கல்வி உதவித்தொகை பெற்ற குழந்தைகளின் எண்ணிக்கை:

| *தொடர் எண்* | *பெயர்* | *மகன்/மகள்* | *எந்தப் பாடப்பிரிவிற்காக உதவித்தொகை பெறப்பட்டது* | *உதவித்தொகை பெற்ற ஆண்டு* | *உதவித் தொகை (ரூ)* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| | | | | | |

பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் கையொப்பம்.

**விண்ணப்பதாரின் உறுதிமொழி**.**

மேலே அளிக்கப்பட்ட தகவல்கள் நான் நன்கு அறிந்தவரையில் சரியானது என்றும் உண்மையானது என்றும் இதனால் உறுதியளிக்கிறேன். மேலே அளிக்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் தவறு இருப்பது கண்டறியப்பட்டால், பெறப்பட்ட உதவித்தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்துவதற்கு இதன் வாயிலாக நான் ஒப்புக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட வேறு எந்தவொரு வாரியத்திடமிருந்தோ வாரியங்களிடமிருந்தோ வேறு எந்தவொரு அரசின் திட்டங்களின் கீழோ இது போன்ற பயன்களை நான் பெறவில்லை என்றும் இதனால் உறுதியளிக்கிறேன்.

இடம்:

நாள்: பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் கையொப்பம்.

*ஏதேனும் தவறான உறுதிமொழி/சான்றளிப்பு அளிக்கப்பட்டிருப்பின் சட்டப்படி நடவடிக்கை எடுப்பது தவிர்க்க இயலாததாகும்.

---

**சான்றிதழ்*.**

இந்த விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் சரியாக உள்ளன என்று நான் இதனால் சான்றளிக்கிறேன்.

இடம்:

நாள்:

உறுப்பினர் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம்/சம்பந்தப்பட்ட பணியின் பதிவு பெற்ற தொழிற்சங்கத்தின் தலைவர்/செயலாளர்/சம்பந்தப்பட்ட தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்/வேலைவாய்ப்புச் சான்றிதழ் அளிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட ஏனைய யாதொரு அதிகாரி

ஏதேனும் தவறான உறுதிமொழி/சான்றளிப்பு அளிக்கப்பட்டிருப்பின் சட்டப்படி நடவடிக்கை எடுப்பது தவிர்க்க இயலாததாகும்.

---

**தொகை வழங்க அனுமதி.**

உரியவாறு சரிபார்த்த பின்னர், திரு/திருமதி.......................................................................,,,,.என்கிற பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் (பதிவு எண்..........................................)செல்வி/செல்வன்...............................என்கிற மகளுக்கு/மகனுக்கு கல்வி உதவித் தொகை என்ற வகையில் ரூ...................../—(ரூபாய்......................மட்டும்) வழங்குவதற்கு நான் இதனால் அனுமதியளிக்கிறேன்.

இடம்:

நாள்:

தொழிலாளர் நல உதவி ஆணையரின்
(சமூகப் பாதுகாப்பு / திட்டம்)
........................... மாவட்டம்

**ஒப்புகைச் சீட்டு**

திரு/திருமதி......................என்கிற பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரிடமிருந்து (பதிவு எண்.................................,,,.) கல்வி உதவித் தொகை கோருவதற்கான விண்ணப்பம் பெறப்பட்டது.

இடம்:

நாள்:

தொழிலாளர் நல உதவி ஆணையரின்
(சமூகப் பாதுகாப்பு / திட்டம்)
கையொப்பம் தேதியுடன்
........................... மாவட்டம்

அலுவலக முத்திரை

பெயர்:
பதவிப்பெயர்:

---

*[அரசாணை (நிலை) எண். 168, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (தொ.1)த் துறை, நாள் 03.11.2021]*

தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் அதனைத் தொடர்ந்து திருத்தப்பட்டவாறாக தமிழ்நாடு 2006ஆம் ஆண்டு அமைப்பு சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி (ஆட்டோமொபைல்) பணிமனைப் பணியாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

***திருத்தங்கள்***

மேற்சொன்ன திட்டத்தில்,—

(1) 17ஆம் பகுதியில் உட்பகுதி (2)—இல் இனம் (a)—இல் "ரூ.1,00,000" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "ரூ.2,00,000" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(2) 20ஆம் பகுதியில் உட்பகுதி (1)—இல் "ரூ.20,000" (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "ரூ.50,000" (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(3) பகுதி 21—இல்

(i) உட்பகுதி (1)—இல், அட்டவணையில்:—

(a) தொடர் எண். 6 மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பதிலாக பின்வருவன அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

" 6 XIII நேரடி இளநிலைப் பட்டப் படிப்பு 4000 4000 4000 4000" பயில்பவர் (ஒவ்வொரு கல்வியாண்டும்)

(b) தொடர் எண் 10 மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பின்னர், பின்வரும் தொடர் எண் மற்றும் அது தொடர்பான பதிவுகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது—

"11 XI—A 6ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயில்பவர் 1000 1000 — ";

(ii) உட்பிரிவு (3)க்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவு அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

(3) படிப்பில் தேர்ச்சி பெற்ற பின்னர், உட்பிரிவு (1)—இல் அட்டவணையின் நெடும்பத்தி (1)—இல் தொடர் எண்கள் 2 மற்றும் 5—இல் குறிப்பிடப்பட்ட உதவித் தொகைகளுக்கான விண்ணப்பப் படிவம் XI—இல் வழங்கப்பட வேண்டும்; படிப்பில் தேர்ச்சி பெறுவதற்கு முன்னர், மேற்சொன்ன அட்டவணையின் நெடும்பத்தி (1)இல் 6 முதல் 10 வரையிலான தொடர் எண்களில் குறிப்பிடப்பட்ட உதவித் தொகைகளுக்கான விண்ணப்பம் படிவம் XIII—இல் வழங்கப்பட வேண்டும்; படிப்பு நிறைவு மற்றும் தேர்ச்சி பெறும் முன்னர் தொடர் எண்கள் 1,3 மற்றும் 4 இல் குறிப்பிடப்பட்ட உதவித் தொகைகளுக்குக்கான விண்ணப்ப படிவம் XII—இல் வழங்கப்பட வேண்டும், பாடப்பிரிவு நிறைவு மற்றும் தேர்ச்சி பெறும் முன்னர் அட்டவணையின் நெடும்பத்தி (1)—இல், தொடர் எண் 11—இல் குறிப்பிடப்பட்ட உதவித்தொகைகளுக்கான விண்ணப்பம் படிவம் XI—A—இல் வழங்கப்பட வேண்டும்",

(4) படிவம் XIக்குப் பின்னர் பின்வரும் படிவம் சேர்த்து கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

**"படிவம்-XI-A**

[பகுதி 21(3)—ஐக் காண்க]

**6 ஆம் வகுப்பு / 7ஆம் வகுப்பு / 8 ஆம் வகுப்பு / 9 ஆம் வகுப்பு பயிலும்**

**மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பம்**

பெறுநர்

தொழிலாளர் நல அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)

**.............................................**மாவட்டம்.

**1.** பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் பெயர்

**2.** (a) முதன் முதலாகப் பதிவுசெய்த நாள் மற்றும் பதிவெண்

(அடையாள அட்டையின் நகல் இணைக்கப்பட வேண்டும்)

(b) இறுதியாகப் புதுப்பிக்கப்பட்டது நாள், (எதுவரை புதுப்பிக்கப்பட்டதோ அந்த கால அளவினைக் குறிப்பிடுக.)

**3.** முகவரி (முழு முகவரி) அஞ்சல் குறியீட்டுடன்:

**4.** பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள்:

| *தொடர் எண்* | *பெயர்* | *பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளருடனான உறவு* | *வயது* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| | | | |

**5.** கல்வி உதவித்தொகை கோரும் மகன் / மகளது விவரங்கள்:

| *தொடர் எண்* | *பெயர்* | *பிறந்த நாள்* | *பயிலும் வகுப்பு (வகுப்பு VI/VII/VIII/IX)* | *பயிலும் ஆண்டு (கல்வி ஆண்டைக் குறிப்பிடுக)* | *பள்ளியின் பெயர் முழு முகவரியுடன்* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| | | | | | |

***குறிப்பு:***—கல்வி பயில்பவர் பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளரின் மகன்/மகள் என்று பள்ளியின் முதல்வர் / தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**6.** வாரியத்திடமிருந்து ஏற்கனவே உதவித்தொகை பெற்ற குழந்தைகளின் எண்ணிக்கை:

| *தொடர் எண்* | *பெயர்* | *மகன் / மகள்* | *உதவித்தொகை பெறப்பட்டது பாடப்பிரிவு* | *உதவித்தொகை பெறப்பட்ட ஆண்டு* | *உதவித் தொகை* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| | | | | | |

பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளியின் கையொப்பம்/பெருவிரல் ரேகைப்பதிவு.

**விண்ணப்பதாரின் உறுதிமொழி***

மேலே அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்றும் எனக்கு தெரிந்தவரையில் உண்மையானவை என்றும் இதனால் நான் உறுதியளிக்கிறேன். மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் தவறானவை என இறுதியில் கண்டறியப்படுமாயின், உதவித் தொகையாகப் பெறப்பட்ட தொகையை முழுமையாகத் திருப்பித் தருவதற்கு நான் இதனால் ஒப்புக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட ஏனைய யாதொரு நல வாரியம் அல்லது வாரியங்களிலிருந்து அல்லது ஏனைய யாதொரு அரசுத் திட்டங்களின் கீழ் இது போன்ற பயன்களையும் நான் கோரிப் பெறவில்லை என்பதையும் இதனால் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடம்:

நாள்: பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளியின் கையொப்பம்/பெருவிரல் ரேகைப்பதிவு.

"யாதொரு தவறான உறுதிமொழிக்கு சான்றளிப்புக்கு / சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்.

**சான்று***

விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்று நான் இதனால் நான் சான்றளிக்கிறேன்.

இடம்:

நாள்:

உறுப்பினர்கள், .......... தமிழ்நாடு........... நலவாரிய வாரியம் / தொடர்புடைய வேலைவாய்ப்புக்கான பதிவுபெற்ற தொழிற்சங்கத்தின் தலைவர்/செயலாளர்/சம்பந்தப்பட்ட தொழிலாளர் உதவி ஆய்வாளர்/வேலைவாய்ப்புச் சான்றிதழ் வழங்க அனுமதிக்கப்படும் ஏனைய யாதொரு அலுவலர்

"யாதொரு தவறான உறுதிமொழிக்கு சான்றளிப்புக்கு / சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஒப்பளிப்பு**

உரிய சரிபார்ப்பிற்குப் பின்னர், பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளியான திரு/திருமதி............ (பதிவெண்.............) என்பவரது மகனாகிய / மகளாகிய செல்வன் / செல்வி ..................... என்பவருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ......................../– (ரூ............. மட்டும்) வழங்க இதனால் நான் அனுமதியளிக்கிறேன்.

தொழிலாளர் நல அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)
..........................மாவட்டம்.

அலுவலக முத்திரை:
இடம்:
நாள்:

**ஒப்புகைச் சீட்டு**

பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளர் திரு/திருமதி............ (பதிவு எண்.............) என்பவரிடமிருந்து கல்வி உதவித் தொகைக்கான அனுமதி கோரும் விண்ணப்பம் பெறப்பட்டது.

தொழிலாளர் நல அலுவலர்
(சமூகப் பாதுகாப்புத் திட்டம்)
மாவட்டம் (நாளுடன்).

அலுவலக முத்திரை:
பெயர்:
பதவி:

R. **கிர்லோஷ் குமார்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.